**உதவி அமர்வு நீதிமன்றம் / சார்பு நீதிமன்றம், துறையூர்**
**SC.No.139/2023**

**எதிரி ஆஜர்.**

**தேதி:25.09.2024**

2024ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 25ம் நாள் சாட்சியாகிய அ.சா.3 வது நபரின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி திருமதி.P.தமிழ்ச்செல்வி என்பவரால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரவணன் | தகப்பனார் பெயர் | : | மாணிக்கம் |
| கிராமம் | : | பெரியசித்தூர் | தாலுக்கா | : | துறையூர் |
| தொழில் | : | விவசாயம் | சமூகம் | : | |
| வயது | : | 40 | நாள் | : | 25.09.2024 |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல்விசாரணை:**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி என் அப்பா அவரை தெரியும். சம்பவம் நடந்த அன்று பார்த்தேன் அதற்கு பிறகு இப்ப தான் பார்க்கிறேன். தேதி, மாதம், வருடம் எனக்கு தெரியாது. சுமார் 3வருடத்திற்கு முன்பு நான் விவசாயம் செய்தேன் காட்டில் இருந்தேன். காட்டில் இருந்து வரும்போது என் தம்பி அவன் பொண்டாட்டியை தூக்கி அழுது கொண்டு இருந்தேன், யார் என்னவென்று கேட்டேன், தம்பி மனைவி மயக்கத்தில் இருந்தார். என் தம்பி அழுது கொண்டு இருந்தான். மருத்துவமனைக்கு எடுத்து சென்றுவிட்டோம், மருத்துவமனையில் என் தம்பி மனைவிக்கு சிகிச்சை அளித்த பிறகு யார் வெட்டினார் என்று கேட்ட போது உங்க அப்பா தான் வெட்டினார் என்று சொன்னார். இது சம்பந்தமாக போலிஸார் என்னை விசாரித்தார்களா என்றால் அங்கே வந்து விசாரித்தார்கள்.

**குறுக்குவிசாரணை:**

1. இப்ப சொன்ன விவரங்களை தான் போலிஸார் மருத்துவமனையில் விசாரிக்கும் போதும் சொன்னேன் என்றால் ஆமாம். சம்பவம் நடக்கும் போது நான் காட்டில் இருந்தேன் என்றால் ஆமாம். சம்பவ இடத்துக்கு மேற்குபுறமும் கிழக்கு புறமும் மலை குமுடு உள்ளதா என்றால் உள்ளது. தம்பி மனைவி எந்த பக்கம் இருந்து வந்தார் என்று போலிஸார் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை. மலையில் இருந்து விறகுகளை தலையில் சுமந்து வரும் போது கீழே விழ வாய்ப்பு இருக்குமா என்றால் வாய்ப்பு இருக்கும். நான் போகும் போது எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் ஒரு 10 நபர்கள் இருந்தார்கள். அந்த 10 நபர்கள் சாட்சிகளாக போட்டுள்ளார்களா என்றால் தெரியாது. போலிஸர் விசாரித்ததாக சொல்லுகிறேன் அதற்கு அப்புறம் விசாரித்தார்களா என்றால் இல்லை. நான் சொல்கிற மாதிரி எந்த சம்பவமும் ஏற்படவில்லை என்றும் போலிஸார் கேட்டு கொண்டதால் வழக்கிற்கு அனுசரணையாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

M.JAISANKAR Digitally signed by M.JAISANKAR Date: 2024.09.25 17:28:52 +0530

சார்பு நீதிபதி,

துறையூர்.

**உதவி அமர்வு நீதிமன்றம் / சார்பு நீதிமன்றம், துறையூர்**
**SC.No.139/2023**

**எதிரி ஆஜர்.**

**தேதி:25.09.2024**

2024ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 25ம் நாள் சாட்சியாகிய அ.சா.4 வது நபரின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி திருமதி.P.தமிழ்ச்செல்வி என்பவரால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்லமுத்து | தகப்பனார் பெயர் | : | லெட்சுமணன் |
| கிராமம் | : | பெரியசித்தூர் | தாலுக்கா | : | துறையூர் |
| தொழில் | : | விவசாயம் | சமூகம் | : | |
| வயது | : | 52 | நாள் | : | 25.09.2024 |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல்விசாரணை:**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு யார் யாரை வெட்டினார்கள் என்று தெரியாது, வயலுக்கு போய்விட்டு இரவு 8 மணிக்கு வந்தேன், நான் பார்க்கவில்லை மருத்துவமனைக்கு சென்றுவிட்டார்கள். போலிஸார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

1. கடந்த 04.07.2022ம் தேதி காலை சுமார் 9 மணியளவில் ராதிகாவும் செல்லதுரையும் காட்டிலிருந்து விறகுகளை எடுத்து கொண்டு சரவணன் ஆட்டு கொட்டகை அருகே வந்து கொண்டிருந்த போது மாணிக்கம் ராதிகாவை மறித்து தகாத வார்த்தையால் திட்டி நான் சேர்த்து வைத்திருந்த சொத்தை அனுபவித்து

வைத்து கொண்டு எனக்கு சோறு போடாமல் என் மகனிடம் என்னை கேவலமாக சொல்லி வைத்து என்னை வீட்டை விட்டு துரத்திவிட்டு ஊரில் தலைகாட்ட முடியவில்லை என்று சொல்லி திட்டி அடித்து கீழே தள்ளிவிட்டு நீயெல்லாம் உயிரோடு இருக்கக்கூடாது என்று சொல்லி மறைத்து வைத்திருந்த கொடுவாளை எடுத்து செத்து ஒழிந்துபோ என்று ராதிகாவின் வலதுகணுக்காலில் வெட்டி துண்டாக்கிவிட்டு அங்கிருந்து ஓடிவிட்டதாக கேள்விபட்டு போலிஸார் விசாரணையில் அவ்வாறு சொல்லிவிட்டு தற்போது மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

M.JAISANKAR Digitally signed by M.JAISANKAR Date: 2024.09.25 17:29:04 +0530

சார்பு நீதிபதி,

துறையூர்.

**<u>உதவி அமர்வு நீதிமன்றம் / சார்பு நீதிமன்றம், துறையூர்</u>**
**<u>SC.No.139/2023</u>**

**<u>எதிரி ஆஜர்.</u>**

**<u>தேதி:25.09.2024</u>**

2024ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 25ம் நாள் சாட்சியாகிய <u>அ.சா.5</u> வது நபரின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி திருமதி.P.தமிழ்ச்செல்வி என்பவரால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தமிழ்பாண்டியன் | தகப்பனார் பெயர் | : ராமசாமி |
| கிராமம் | : பெரியசித்தூர் | தாலுக்கா | : துறையூர் |
| தொழில் | : விவசாயம் | சமூகம் | : |
| வயது | : 30 | நாள் | : 25.09.2024 |

**<u>சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல்விசாரணை:</u>**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். சம்பவம் நடந்து 2 வருடம் இருக்கும். என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது நான் வயலில் இருந்தேன். வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது, போலிஸார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை.

**<u>சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. கடந்த 04.07.2022ம் தேதி காலை சுமார் 9 மணியளவில் ராதிகாவும் செல்லதுரையும் காட்டிலிருந்து விறகுகளை எடுத்து கொண்டு சரவணன் ஆட்டு கொட்டகை அருகே வந்து கொண்டிருந்த போது மாணிக்கம் ராதிகாவை மறித்து தகாத வார்த்தையால் திட்டி நான் சேர்த்து வைத்திருந்த சொத்தை அனுபவித்து வைத்து கொண்டு எனக்கு சோறு போடாமல் என் மகனிடம் என்னை கேவலமாக

சொல்லி வைத்து என்னை வீட்டை விட்டு துரத்திவிட்டு ஊரில் தலைகாட்ட முடியவில்லை என்று சொல்லி திட்டி அடித்து கீழே தள்ளிவிட்டு நீயெல்லாம் உயிரோடு இருக்கக்கூடாது என்று சொல்லி மறைத்து வைத்திருந்த கொடுவாளை எடுத்து செத்து ஒழிந்துபோ என்று ராதிகாவின் வலதுகணுக்காலில் வெட்டி துண்டாக்கிவிட்டு அங்கிருந்து ஓடிவிட்டதாக கேள்விபட்டு போலிஸார் விசாரணையில் அவ்வாறு சொல்லிவிட்டு தற்போது மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

M.JAISANKAR Digitally signed by M.JAISANKAR Date: 2024.09.25 17:29:12 +0530

சார்பு நீதிபதி,

துறையூர்.